Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 10 (26 - 08 - 1992) புதன்கிழமை ஓசை 190

## வட பகுதி பயணிகளுக்கு வவுனி. அனுமதி அட்டை

தென் பகுதியிலிருந்து யாழ். குடா நாடு நோக்கிச் செல்லும் குடாநாட்டுப் பயணிகளுக்கு சிறிலங்கா பொலிஸாரினால் விசேட அனுமதி அட்டை வழங்கப்படுகின்றது. கடந்த 19ஆம் திகதி தொடக்கம் இந்த அனுமதி அட்டை வழங்கும் வேலை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வவுனியா நகரப்பகுதியில் உள்ள சோதனை சாவடி ஒன்றில் வைத்து யாழ் பயணிகளுக்கு அனுமதிஅட்டை வழங்கப் படுகிறது பயணிகளின் பெயர், இடம் மற்றும் தென்பகுதி முகவரிகள் கேட்டுக் குறிக்கப்பட்டதன் பின்னரே இது வழங்கப்படுகிறது. மீள தென் பகுதி செல்வதாயின் இந்த அட்டையைக் கொண்டு வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டதாம். (தி)

# புலிகளை வெற்றிகொள்ள 2 லட்சம் துருப்புக்கள் தேவை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

[கொழும்பு]

"எம்மிடம் போதிய ஆட்பலமும், பொருளாதார வளமும் இல்லை. போதிய படைப்பலம் இருந்தால் துரித கதியில் காரியத்தை முடிக்கலாம். குறைந்தது இரண்டு இலட்சம் படைவீரராவது இருந்தால் புலிகளை விரைவில் தோற்கடித்துவிடலாம்" எனச் சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளருக்கு பலாலி விமானப்படைத் தளத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இம் மாநாட்டில் வடபகுதிக்கான புதிய தளபதி ஜெரி டி சில்வா யாழ். மாவட்ட தளபதி பிரிகேடியர் தலுவத்த, கடற்படைத் தளபதி கிளரன்ஸ் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில் "குடாநாடு, வடக்கின் பிரதானநிலப்பகுதி, கிழக்கு ஆகிய மும் முனைகளில் புலிகள் போராடுகின்றார்கள் எனவே நாமும் மும்முனைகளில் போராடவேண்டி நேரிட்டுள்ளது" என்றும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்கா இராணுவம் தற்பொழுது 84.000 பேரைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மாதகல் பகுதி வீடுகள் ராணுவத்தால் தகர்ப்பு

(அலுவலக நிருபர்)

மாதகல் பகுதியில் தங்கியுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களின் வீடுகளைக் குண்டுவைத்து தகர்த்து வருகின்றனர்.

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகளை இவர்கள் தகர்த்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட மறுப்பு

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் விடுத...

இரண்டாம் கட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும்...

## கல்முனை இராணுவம் மக்கள் குடியிருப்புமீது சூடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் தேடுதல் வெளிச்சத்தைப்பாய்ச்சி 50கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இத் துப்பாக்கிச் சூட்டின் போது சன்னங்கள் பூம்புகார் கொழும்புத்துறை மக்கள் குடியிருப்புகள் மீது விழுந்தன.

நள்ளிரவில் இச் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

## அலம்பில் தாக்குதலில் ஏழு இராணுவம் பலி

(மணிலா)

அலம்பிலில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ காவலரண்கள் மீதான தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக...

பட்டதாக முன்னர் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

## தமிழர் வீட்டுக்கு குண்டுவீச்சு

[மாத்தளை]

## உறவினர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு தேற்றாத்தீவில் கடந்தவாரம் கைது செய்யப்பட்ட 17 பேர் பற்றி விசாரிக்கச் சென்ற அவர்களது உறவினர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

மட்டக்களப்பின் தேற்றாத்தீவு, கொம்மாதுறை, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகலிருந்து இந்த 17 தமிழரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தென்பகுதியில் கொலைப்படை

## பத்திரிகையாளர்களுக்கு பயமுறுத்தல் அதிகரிப்பு

[கொழும்பு]

தென்பகுதி பத்திரிகையாளர்களுக்கு அரச ஆதரவுக் கொலைஞர் படைகளிடமிருந்து மீண்டும் கொலைப்பயமுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றது கத்திக்குத்துக்கு இலக்கான "காட்டூனிஸ்ட்" யூனூஸிற்கு நேற்று மீண்டும் பேற்படி கொலைஞர் படைகளிடமிருந்து கொலைப் பயமுறுத்தல் கிடைத்திருக்கிறது

கடந்த வாரம் நடைபெற்ற கத்திக்குத்தில் காயமடைந்த நிலையில் தாக்குதலுக்குள்ளாகிய தனது வீட்டைப்பார்வையிடுவதற்காக படப்பிடிப்பாளர் சகிதம் சென்றபோது இப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

கத்திக்குத்துசம்பவம்தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட அதே நபரே யூனூஸிடம் நேரடியாக வந்து கொலை செய்யப் போவதாக மிரட்டியிருக்கிறார்.

## ஜனாதிபதிதேர்தல் வழக்கு இவ்வாரத்திற்குள் தீர்ப்பு

சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்குத் தீர்ப்பு அடுத்த மாதம் நான்காம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது

இவ்வழக்கை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஐவருக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது என சிறிலங்கா பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதியரசர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டி

[4ஆம் பக்கம் பார்க்க]

## பிரச்சினையை நாமே தீர்ப்போம்; வெளிநாட்டுப்படை தேவையில்லை - பிரேமதாசா

(நுவரெலியா)

எமது பரச்சினையைநாமே பேசித்தீர்த்துக் கொள்வோம். வெளிநாட்டுப் படைகள் இங்கு தேவையில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நுவரெலியாவில் இடம் பெற்ற நுவரெலியா மாவட்ட ஐ. தே. க. அங்கத்தவர்கள் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய பிரேமதாசா; ஒரு சில அரசியல் வாதிகள் தமது சுயநலத்திற்காக எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள நல்லுறவை பிரிக்க முயலுகிறார்பிளவை ஏற்படுத்த எத்தனிக்கிறார்கள்.

இன்று இந்நாட்டில் நாம் ஜனநாயக ரீதியில் ஆட்சி செய்வதை விரும்பாத ஒரு சில அரசியல்வாதிகள் ஐ. தே. க.வில் இருந்து வெளியேறி மேடைகளில் நான் பிரபாகரனுக்கு கை காட்டுவதாகவும் தொண்டமானிடம் மண்டியிடுவதாகவும் கூறிவருகிறார்கள்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## க. பொ. த. (உ/த) பரீட்சை நேற்றுடன் பூர்த்தி

[நமது நிருபர்]

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் யாழ்: மாவட்டத்தில் க: பொ: த: உயர்தரப் பரீட்சை சிறப்பாக நடைபெற்ற

ஆரம்பமான மேற்படிபரீட்சை நேற்றுடன் முடிவடைந்தன. யாழ்- மாவட்டத்தில் 67 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெற்றது:

இப் பரீட்சை சுமுகமாக...

## தகவல் வெளியிட மறுப்பு

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்கும் பொருட்டு ராணுவத்தினர் மேற்கொண்ட 'பூமியதிர்ச்சி' நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தை சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையலுவலகம் வெளியிட மறுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

மேற் கொள்ளப்பட்ட இராணுவ காவலரண்கள் மீதான தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்

## தமிழர் வீட்டுக்கு குண்டு வீச்சு

[மாத்தளை]

மாத்தளை நகரிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள கோம்பிலிவெல என்னுமிடத்தில் வசிக்கும் தமிழர் ஒருவரின் வீட்டுக்கு கடந்த வியாழன் இரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டது

இந்தக் குண்டு மலசலகூடத்திலேயே விழுந்ததால் வீட்டுக்கோ அங்கிருந்தவர்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், மலசலகூடம் மட்டும் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கைக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாக மாத்தளை பொலிசார் மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். என்றும் தனிப்பட்ட கோபம் காரணமாகவே இந்த கைக்குண்டு வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாசா; ஒரு சில அரசியல்வாதிகள் தமது சுயநலத்திற்காக எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள நல்லுறவை பிரிக்க முயலுகிறார்கள். அவர்கள் இங்குள்ள இந்திய வம்சாவளியினருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில்

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் யாழ்: மாவட்டத்தில் க: பொ: த: உயர்தரப் பரீட்சை சிறப்பாக நடைபெற்றதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த முதலாம் திகதி நேற்றுடன் முடிவடைந்தன. யாழ்- மாவட்டத்தில் 67 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெற்றது:

இப் பரீட்சை சுமுகமாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் யாழ்-

[4ஆம் பக்கம் பார்க்க]

# இடம்பெயர்ந்த மக்களுக்கு குடியிருப்பு ஏற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு சாத்தியமான இடங்களில் தனித்தனியானசிறு ஓலைக் குடிசைகள் அமைக்கப்படுகின்றன என்றும் அவற்றில் இந்த மக்கள் குடியிருத்தப் படுவார்கள் என்றும் தெரியவருகிறது

மேலும் பயம் காரணமாக வெளியேறியவர்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்கு திரும்பிச்செல்ல ஊக்குவிக்கப்படுவர் என்றும், இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் தங்கள் வீடுகளைக் கொண்டிருப்பவர்கள் தற்போது தஞ்சமடைந்த பகுதியில்தன்னிச்சையாக குடியேற விரும்பி காணி உரிமையாளரின் சம்மதத்தோடு காணிகளை தெரிவு செய்தால் அவர்களுக்கு குடிசைகள் அமைப்பதற்கு உடனடியாக வேண்டிய உதவிகளை செய்து கொடுக்கப்படுமெனவும், இதற்காக கிராம சேவகர்கள் ஊடாக உதவி அரசாங்க அதிபர்களோடு தொடர்பு கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தீவகத்திலிருந்து கப்பலில் நால்வர் யாழ். வந்தனர்

(நமது நிருபர்)

குமாரி கப்பலில் தீவுப் பகுதியிலிருந்து இரு பெண்மணியும் இரண்டு ஆண்களும் உட்பட நால்வர் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர் இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் தனது உறவினரை சந்திக்கவும், மற்றைய மூன்றுபேரும் அனலதீவு, புங்குடுதீவு ஆலயத்திற்கு சென்று திரும்பிய பூசகர்களாகும்.

இவர்கள் காரைநகர் கடற்படையினர் படகின் மூலம் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் காங்கேசன் துறைக்கு அழைத்துவரப்பட்டு பின்னர் குமாரி கப்பல் மூலம் வந்தடைந்தனர். (82)

## நாடு திரும்பும் அகதிகளுக்கு பிரிட்டன் உதவி

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகளை மீளக் குடியமர்த்தும் திட்டத்திற்கு பிரிட்டிஷ் அரசு உதவி வழங்க முன் வந்திருக்கிறது.

நாடு திரும்பிய மேற்படி அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு வசதியாக சுமார்நான்கு கோடி இருபதுலட்சம் ரூபாவை பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பாக வழங்க உள்ளது.

இப்பணத்தின் அரைப்பகுதி ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயத்திற்கும் மிகுதிசர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் வழங்கப்பட்டு அவர்களின் ஊடாக மேற்படி அகதிகளுக்கு உதவி அளிக்கப்பட இருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தில்

## ஊழியர் வேலை நிறுத்தம் குமண வர தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களுடன் இம்மாத இறுதியில் வரவிருந்த குமண கப்பல் தாமதித்தே வந்து சேரும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு துறைமுக ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து மேற்படி கப்பல் தாமதித்தே வந்து சேரும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று யாழ் அரச அதிபரிற்கு தெரிவித்தது

இதேவேளை இம்மாத இறுதியில் கொழும்பிற்குச் செல்ல இருந்த 'குமாரி' கப்பலை

[4ஆம் பக்கம் பார்க்க]

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

## மேலதிக உதவி கோரி கொழும்பிற்குச் செய்தி

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெயர்ந்த மக்களிற்கு மேலதிக உதவி கோரி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய கொழும்பு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி இராணுவ நடவடிக்கையின் போது சுமார் ஒரு

[4ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளின் அரசியற் பிரிவை உடன் தடை செய்ய வேண்டும்

## — அஷ்ரப்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவை உடனடியாக தடை செய்ய வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட எம். பி. யுமானஎம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அஷ்ரப்;

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே கொடூரமான போர் ஒன்று இவ்வளவு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் புலிகளின் அரசியல் பிரிவை தடை செய்ய அரசாங்கம் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்றுகூட சர்வகட்சி மாநாட்டுக்குச் சென்றால் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவின் பெயர் கொண்ட பலகை ஒன்று மேசையில் இருப்பதை காண முடியும்.

ஜே.வி.பி. இயக்கம்அரசியல் பொது வோட்டத்தில் இருந்து விலகி நாசகார செயல்களில் ஈடுபட்டபோது அரசாங்கம் முதலில் செய்த வேலை அந்த இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை தடை செய்தமையேயாகும். இன்று புலிகளுடன் அரசாங்கம் போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக் கொண்டிக்கிறது.

இரண்டாயிரத்திற்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் பலியாகி விட்டனர். நாலாயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் காயமடைந்து உடல் ஊன முற்றிருக்கின்றார்கள். டென்சில் கொப்பேகடுவ, விஜயவிமலரட்ண உட்பட பல படை உயரதிகாரிகளும்பலியாகியிருக்கிறார்கள். யதார்த்தம் இவ்வாறு இருக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு இன்னமும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருக்கிறது.

புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடன் தேனிலவு ஒன்றை கொண்டாடிக் கொண்டிருந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

# வியட்நாமிய அகதிகள்மீது ஜெர்மன் வலதுசாரிகள் தாக்கு

## அந்நியரை வெளியேறுமாறு அச்சுறுத்தல்

ஜெர்மனியில் உள்ள நொஸ்ராக் என்னும் இடத்தில் 112 வியட்நாமியர் தங்கியிருந்த முகாமை வலதுசாரித் தீவிரவாதிகள் தீயிட்டுக் கொளுத்தினார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

மேலும் 5 நாட்களாகத் தொடரும் கலவரத்தைப் பொலிசாரினால் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடியாது இருப்பதைபிட்டுக் குறை கூறப்படுகிறது

''ஜெர்மனி ஜெர்மனியருக்கே'', ''வெளி நாட்டவர் வெளியேற வேண்டும்''. ''அகதிகள் வருகை குறைக்கப்பட வேண்டும்'' என்ற கோசங்களைதீவிரவாதிகள் முன்வைத்துள்ளனர்.

அகதிகள் மீதான வன்முறைகளை ஜெர்மன் கூட்டரசாங்கம் கண்டித்துள்ளது.

எதிர்க்கட்சியான சோசல் டெமோகிறட்டிக் கட்சியே வன்முறைக்குக் காரணம் என அரசு தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அண்மைக் காலமாக மேற்கு நாடுகளில் வெளியாரை குறிப்பாக ஆசியரை எதிர்க்கும் மனோபாவம் அதிகரித்து வருவது தெரிந்ததே.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

இருபாலாருக்குமுரிய *Seiko, Citizen* ஓட்டோமற்றிக்; *Casio-Solor* விற்பனைக்குண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (3079)

### புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தகசாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்யது. (3071)

### எழுதுவினைஞர்களுக்கான பயிற்சி

வடமராட்சியில் உயர்கல்வி நிறுவனமும், மோடேன் கொமேஸ் நிறுவனமும் இணைந்து நடாத்தும் எழுதுவினைஞர் அனுமதிப் பரீட்சைக்கான துரித பயிற்சி, திறமை மிக்க ஆசிரியர்களால் 26-8-92இல் ஆரம்பமாகிறது. இன்றே பதிவு செய்யுங்கள். மோடேன் கொமேஸ், சிவன்கோவிலடி, பருத்தித்துறை. (3072)

### முருகன் தமிழ் அர்ச்சனை மலர்

தேர்த் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கோவில் வாசலில் அமைந்திருக்கும் அண்ணா தொழிலகத்தாரின் விளம்பர நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருள்களை வாங்கி முருகன் அர்ச்சனை மலரை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (3085)

### எழுதுநர் பரீட்சை


# ஒன்றரை லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்த முஸ்தீபு

ஒன்றரை இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இன்று 26 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்தவுள்ளனரெனத் தெரிய வருகிறது.

வேலை நேரம் அரைமணி நேரத்தினால் அதிகரிக்கப்பட்டமை, தொழிலாளர்களின் வசிப்பிடங்களான ''லயன்களை'' பழுது பார்க்கும் வேலையை தொழிலாளர்களே செய்ய வேண்டுமென நிர்ப்பந்திப்பது, தொழிலாளர்களின் பிள்ளைகளை தொழிலாளர்களாகப் பதிவு செய்யாமை உட்பட பல்வேறு காரணங்களை முன் வைத்து-:

16 சங்கங்களை கொண்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்மேளனம் இப் போராட்டத்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

## வேலை நிறுத்தத்தில் காங்கிரஸ் கலந்து கொள்ளாது

**-செல்லச்சாமி அறிவிப்பு**

(கண்டி)

தோட்ட தொழிற் சங்கக் கமிட்டி இன்று மலையகத்தில் நடத்த இருக்கும் அடையாள வேலைநிறுத்தத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளாது என இக்கட்சியின் பொதுச் செயலாளர் எம் எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழா அடுத்த மாதம் ஐந்தாம் திகதி பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 400 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட உள்ளது.

மருத்துவம், விஞ்ஞானம், கலைமாணி, கலைமுதுமாணி, நுண்கலை டிப்புளோமா மற்றும் ஏனைய டிப்புளோமா பட்டங்கள் வழங்கப்பட உள்ளது. இப்பட்டமளிப்பு விழாவில் புதிய பதக்கங்கள் வழங்கப்பட இருக்கிறது.

இப்பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகளும் நினைவுப் பேருரையும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 30 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மேற்படி கலையரங்கில் நடைபெற உள்ளது. 7 ஆம் திகதி இராமநாதன் நினைவுப் பேருரை நடைபெறஉள்ளது. இந்த நினைவுப் பேருரையை பொருளியல் துறைத்தலைவர் கலாநிதி சண்முகநாதன் நிகழ்த்துவார். 8 ஆம் திகதி லேடி ராமநாதனின் நினைவுப் பேருரையை சமஸ்கிருத துறை தலைவர் கலாநிதி சிவசாமி நிகழ்த்துவார்.

### திறப்பு விழா

கரணவாய் வடக்கு கரவெட்டி வீரபத்திரர் சனசமூக நிலையம் இன்று புதன் கிழமை 26ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் கரவெட்டி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (82)

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதாரத் திணைக்களம்**

**குடும்ப நல சேவையாளருக்கான பயிற்சிநெறி**

கடந்த யூன் மாதம் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற குடும்ப நல சேவையாளருக்கான முதலாம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி 2 ஆம் ஆண்டு பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.


எனவே 1 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியை அவரது காரியாலயத்தில் காலை 8. 30 மணிக்கு சந்திக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

வைத்திய கலாநிதி


### ஆதாரம் காட்டிப் பெறவும்

திரு. திருமதி கே. வரதகுலசிங்கம் என்பவர்களது பாஸ்போர்ட், வங்கிக்கடன் அட்டை வேறும் பல தஸ்தாவேஜுக்கள் அடங்கிய பிரயாணப்பை ஒன்று வை. நாகேஸ் என்பவரால் ஆலங்கேணி கடற்கரைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கம்பியூட்டர் கல்வி



[] Basic
[] Pascal
[] dBase III+
[] Lotus 1-2-3
[] Word Star 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன:

மேலதிக விபரங்களுக்கு:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்**

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
( வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

கிளைகள்:

வடமராட்சியில்:
சதாபொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (சி/4945)

தென்மராட்சியில்;
சயன்ஸ் சென்ரர்
மடத்தடி,
சாவகச்சேரி.


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | அழிப்பு |
|---|---|
| 28 | 26 |
| — | — |
| 01 | 08 |
| — | — |
| 1965 | 1989 |

**பொன்னுத்துரை முருகமூர்த்தி (ராசா)**

இருபத்து நான்கு வயது இளம் காளை - உன்னை
இரக்கமின்றிக் கொன்றதே காடை
மறக்க முடியாமல் துடிக்கின்றோம் நாங்கள்- எங்கள்
மனத்துயர் தீர்த்திட வருவாயோ நாளை?


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

**மஹோற்சவம்**

29 - 08 - 92 -- 1 - 09 - 92
வரையும்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 29 - 08 - 92 | சனிக்கிழமை மு.ப 11.30 மணி |
| வேட்டைத் திருவிழா | 06 - 09 - 92 | ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணி |
| சப்பறத் திருவிழா | 07 - 09 - 92 | திங்கட்கிழமை மாலை 4.00 மணி |
| தேர்த்திருவிழா | 08 - 09 - 92 | செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி |
| தீர்த்தத் திருவிழா | 09 - 09 - 92 | புதன்கிழமை காலை 8.00 மணி |
| கொடி இறக்கம் | 09 - 09 - 92 | புதன்கிழமை |
| வைரவர் பொங்கல் | 10 - 09 - 92 | வியாழக்கிழமை பி.ப. 3.00 மணி |

நிர்வாக சபை

ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(3086)


## நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 26

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் பயிற்சிமுகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

★ **மரைக்கார்** (கு. தர்மராசா - பேசாலை, மன்னார்)

1987ஆம் ஆண்டு மன்னார் நானாட்டான் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட-

**கில்மன்** (செல்வக்குமார் - பாலக்குழி, மன்னார்)

**ரஞ்சன்** (இம்மானுவேல் ரஞ்சன் - பிச்சைக்குளம், மன்னார்)

**அருச்சுனா** (சகாயம்-கள்ளிக்கட்டைக்காடு, மன்னார்)

அம்பாறையில், சிங்களக்காடையர்களினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**நிக்கலஸ்** (சிறிகுகன் - மட்டக்களப்பு)

★ **பாக்கியராஜா** (மைக்கல்ராஜ் கந்தையா)

★ **தட்சணா** (சற்குணராசா)

★ **ஆனந்தன்** (வீரமுனை, அம்பாறை)

★ **ரவி** (பிரகாஷ்)

அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட -

★ **சாலிக்குட்டி** (அக்கரைப்பற்று, அம்பாறை)

திருக்கோணமலையில், தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

★ **பிரபா** (தியாகராஜன் செல்வகுமார் - திருக்கோணமலை)

★ **சங்கர்** (அரசு நோயல் சைமன் - திருக்கோணமலை)

திருக்கோணமலையில், தேசவிரோத சக்திகளினால்

### எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரிப்பயிற்சி நூல் 'பொது விவேகப்பயிற்சிகள்' 10-09 92 இல் வெளிவருகின்றது ஆக்கம்: க. குணராசா எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3087)

## வருடாந்த உற்சவம்

[கொழும்புத்துறை]

யாழ். குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் சடந்த 22ஆம்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி இம்மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

27 ஆம் திகதி வியாழன் காலை 6.45 மணிக்குத் திருப்பலி கூட்டுப்பூசையுடனும், சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடையும்.

ஆயப்பங்குத்தந்தை திரு. எச். ஜெபநேசன் அடிகளார் தலைமையில் விசேட கூட்டு வழிபாடுப் பிரார்த்தனைகளும் தினமும் இடம்பெறும் [24]

## இன்று

நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் என். வி. எம். நவரத்தினம் பாட உள்ளார். இவருக்கு பக்க வாத்தியக்கலைஞர்களாக வயலின் வி. கே குமாரசாமி அவர்களும், மிருதங்கம் எம். சிதம்பரநாதன் அவர்களும் பங்கேற்கின்றனர்.

★ ★ ★

நல்லை ஆதீனத்தில் ஆனைப்பந்தி யாழ் இசை மன்றம் வழங்கும் இசைவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக இன்று 7-00 மணி தொடக்கம் 7-45 மணி வரை வீணா கான இசையும் 7-45 மணி தொடக்கம் 9-35 மணி வரை வயலின் சோலோ இசைநிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

---

8. 30 மணிக்கு சந்திக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.


வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

சுகாதார சேவைகள்,
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
இல. 59, விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/4943)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வன்னி மண்ணில்
05 | 2 | 1973



மண்டைதீவு மண்ணில்
26 | 08 | 1990

### வீரவேங்கை எட்றிக்ஸ்
### (ஆசிர்வாதம் ஸ்ரீபன் அனுராஜன்)

தம்பி தம்பியென்று தவிக்குதடா நெஞ்சம்
பெண்கள் ஐவருக்கு தம்பியாய் அவதரித்தாய்
குடும்பத்தில்
தமிழீழம் காணவென்று போருக்கு சென்றாய் நீ
புலியுடுப்பைக் காணவில்லை - உன்
உடலைத்தானும் பார்க்கவில்லை.
மண்டைதீவு மண்ணதனில் மாற்றான் கண்படாமல்
எடுத்தனையோ குப்பிதனை
கடித்தனையோ பாலகனே.
ஆண்டுரெண்டானாலும் ஆறாது நெஞ்சமது
வேகுதடா உடம்பெலாம்
செந்தணல் போல் காயுதடா
வெள்ளிக்கிழமை தன்னில்
வெளிக்கிட்டாய் வீட்டை விட்டு
விடிவெள்ளி காணமுன் படுவெள்ளியானாயோ!

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து வீரவேங்கைகளுடைய ஆத்துமம் இறைவன் பதம் சேரவும், இவர்களது இலட்சியம் நிறைவேறவும் இறைவனை வேண்டி நிற்கும்

1007, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

- இவரது ஐயா, அம்மா,
அண்ணன்மார், அக்காமார்,
அத்தான்மார், அண்ணிமார்,
மக்கள், மருமக்கள்.

(3084)

---

மறக்க முடியாமல் துடிக்கின்றோம் நாங்கள்- எங்கள்
மனத்துயர் தீர்த்திட வருவாயோ நாளை?

''செல்வபவனம்''
சங்கத்தார் வயல்,
இயக்கச்சி. (3081)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
12 | 03 | 1971



வீரச்சாவு
14 | 07 | 1992

### கப்டன் தேனுஜா
### (சிவலிங்கம் மதனிகா)

தமிழினம் தவத்தினாலே
பெற்றெடுத்த தவமகளே
தனித்தொரு நாடு வேண்டி
தனிச்சமர் புரிந்த வீரி
தலைவனின் வழியே சென்று
தன்னிகர் யாருமில்லை என்று
கொக்காவில், கோட்டை
நல்ல ஆனையிறவு, சிலாபத்துறை
பலாலி, மணலாறு
பல சமர் புரிந்து
ஈற்றில் ஆனையிறவு தன்னில்
அந்தகோ! வீரச்சாவு பெற்றாய்
எங்களின் கண்ணீர் அஞ்சலி
உகந்து நீ ஏற்பாய் அம்மா!!

நாளை 27-08-92ல் எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவாய் கேட்கின்றோம்.

1ஆம் கட்டை,
வல்லை றோட்,
தொண்டமானாறு.

- குடும்பத்தினர்

(3082)

---

திருக்கோணமலையில், தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட -

★ **ரசீட்** (திருக்கோணமலை)

இதே ஆண்டு தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஜீவா** (அன்ரன் பெனடிக்ற்)

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**தங்கத்துரை** (கந்தசாமி செல்வராஜா - 'இரத்தினபுரி, வங்காலை, மன்னார்)

**முகுந்தன்** (குணசேகரம் யோகராசா - 5-ம் வட்டாரம், நெடுந்தீவு, யாழ்.)

**அருளப்பு** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம் - கரவெட்டி மேற்கு, யாழ்.)

**ரஜனி**

மண்டைதீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**ஜக்சன்** (பூபாலசிங்கம் சசிகரன் - ரயில் நிலையவீதி, பளை, கிளிநொச்சி)

**முத்துராமன்** (தவராசா இராமகிருஸ்ணன் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

**எட்றிக்ஸ்** (ஆசீர்வாதம் ஸ்ரீபன் அனுராஜன் 1007 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு பெரியநிலாவணை - 1 - ஐச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன் - மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வேப்பவெட்டுவான் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவன், தளவாய்ப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளி ஆகிய 2 தமிழர்கள் - களுவாஞ்சிக் குடிப்பகுதியில் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 14 - தமிழர்கள்.

முல்லைத்தீவு-வற்றாப்பளைப் பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 - தமிழ்ச் சிறுவர்கள்.

யாழ். வேலணை மேற்கில் சிறிலங்காப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4944)

சிந்தனைக்கு

அதிகாரத்தை நாடி, சுதந்திரத்தைப் பறிகொடுப்பது விபரீத ஆசை.
— ஃபிரான்ஸிஸ் பேக்கன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26 - 08 - 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## கருணாநிதி வழியில் ஜெயலலிதா

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. மாநில முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி மு. க. அரசாங்கம் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்பண்ணத் தவறி விட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழத் தொடங்கியுள்ளன. அத்தோடு விடுதலைப் புலிகள் தற்பொழுதும் தமிழ் நாட்டில் பயிற்சி பெற்று வருகின்றார்கள் என்று தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பணம் வழங்கியிருப்பதாகவும், தமிழகப் பத்திரிகையான 'தராசு' மூலம் பெருந் தொகைப் பணம் கைமாறுப்பட்டிருப்பதாகவும், ராஜ்யசபா உறுப்பினரும், ஜனதாதளக் கட்சியின் உறுப்பினருமான சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதே போன்ற குற்றச்சாட்டுக்களை வைத்தே சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தி. மு. க. அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கலைத்தது. அப்பொழுது மத்தியில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி செய்யாவிட்டாலும் காங்கிரஸின் பொம்மையாக சந்திரசேகர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரின் முக்கிய கூட்டாளியாக சுப்பிரமணியம் சுவாமியும் இருந்தார்.

ஆனால், அன்று ஆட்சியில் இருந்த தி.மு.க அரசாங்கம் தமக்கும் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. புலிகளினால், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எதுவும் பாதிக்கப்படவுமில்லை என்பதை வற்புறுத்துவதில் தன்னால் ஆன முயற்சிகளை எல்லாம் எடுத்தது.

போரில் காயப்பட்டு, அங்கவீனர்களாகவும், நடமாட முடியாதவர்களாகவும் இருந்த விடுதலைப் புலிகளைக் கூட கைது செய்து சிறையில் அடைத்தது. தமிழகக்கரையோரம் எங்கும் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று காட்டியது. புலிகள் சட்டம் ஒழுங்கை மீறவில்லை, தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையைக் குழப்பியடிக்கவில்லை என்பதை நிரூபிக்க பகீரத முயற்சி செய்தது. நடுநிலை பத்திரிகைகள் கூட இதனை ஏற்றுக்

# அ. தி. மு. க அரசிற்கு நெருக்கடி அதிகரிப்பு;

# ஜெயலலிதாவின் இராஜினாமா ஒரு நாடகம்.

முதல்வர் ஜெயலலிதா பதவி விலகுவதாகத் தமிழக ஆளுநரிடம் கடிதம் சமர்ப்பித்திருப்பதாக வந்த செய்திகள் வெறும் வதந்தியல்ல என்பதும் புதுடில்லிக்கான அவரது அவசரப் பயணமும் சென்னை அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆளுநரிடம் ஜெயலலிதா பதவி விலகல் கடிதம் கொடுத்திருப்பதாக வெளிவந்த செய்தியை அவரோ, தமிழக அரசோ, தமிழக ஆளுநரோ இதுவரை மறுக்கவில்லை. இதேவேளை ஜெயலலிதாவின் புதுடில்லி விஜயத்திற்கான நோக்கம் பற்றி அ. இ. அ. தி. மு.க. கட்சி வட்டாரங்களோ, தமிழக அரசோ எதையும் குறிப்பிடவில்லை.

பிரதமர் நரசிம்மராவுடன் சந்திப்பை மேற்கொள்ளும் அதிதீவிர முடிவு ஒன்றை ஜெயலலிதா மேற்கொள்வதற்கான பின்னணிக் காரணங்கள் பற்றி அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளன.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். 43 வயதான முன்னாள் நடிகை அரசியலில் சுமுகமான நிலையில் இல்லை என்பதே அது. கதாநாயகியாக ஒரு காலத்தில் விளங்கி, பின்னர் சிந்தனைச் செல்வியாக மாறி, அதிலிருந்து புரட்சித் தலைவியாக கடந்த இருபதாண்டு காலத்தில் உருமாறியபோதும் அரசியலில் தத்தளிக்கிறார் என்பதே அது.

அவரது தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தமிழக மட்டத்திலிருந்து அவர் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளார். அ. இ அ தி.மு க. வினுள்ளும் சக்தி வாய்ந்த ஒரு பிரிவின் எதிர்ப்புக்கு அவர் உள்ளாகியுள்ளார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு எதிராக ஊழல் புகார்களை விசாரிக்க முனையும் அதேவேளை கருணாநிதியும், தி. மு. க. வினரும் ஜெயலலிதாவுக்கு எதிராக பலமான ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

அத்துடன் புலிகளுக்குச் சார்பான சக்திகளும் அடிக்கடி தமது குரலை உயர்த்தி வருகின்றன. ஆகஸ்ட் 15ல் இந்திய சுதந்திர தினத்தின் போதும் புலிகளுக்குச் சார்பான சக்திகளால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் மகாத்மா காந்தி 'செய்து முடி அல்லது செத்து மடி, என்ற சுலோகத்தை முன் வைத்து ''வெள்ளையனே வெளியேறு'' எனக் கேட்டுக் கொண்ட தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் காங்கிரஸ்காரர்களின் சுயமரியாதை மீட்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான கருப்பையா மூப்பனார் கூறியுள்ளார். ஆகஸ்ட் 9 ஆம் திகதியன்று இவ்வாறு கோரிய மூப்பனார் இயல்பாகவே ஜெயலலிதாவை எதிர்க்கும் அபிப்பிராயத்தைக் கொண்டவராவார்.

'வெள்ளையனே வெளியேறு'' பொன்விழாவை ஒட்டி கிராமம் தோறும் காங்கிரஸ் தேசியப் பேரவை அமைக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறும் போது அ. இ அ தி. மு. க. வின் ஊழல் அதிகார துஷ்பிரயோகம் என்பவை விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுவதோடு, அ. இ. அ தி மு. க. விற்கு சார்பான காங்கிரஸ் காரர்களின் போக்கும் கண்டிக்கப்படுகிறது. இன்னும் ஒருபடி மேலே போய் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை நிறுவுவதற்கான தருணம் வந்துவிட்டதாக மூப்பனார் கருதுகின்றார்.

தமிழகத்தின் நகர்ப் புறங்களிலும், படித்தவர்களிடையேயும் ஊழல் என்பது மிகப் பெரும் பிரச்சினையாகி இருப்பதோடு முன்னாள் முதல்வர் கருணாநிதியும், முதல்வர் ஜெயலலிதாவும் இதற்கான கண்டனத்திலிருந்து தப்ப முடியாதவர்களாகவும் உள்ளனர். இதனால் காங்கிரஸ்காரர்கள் தி. மு. க., அ. இ. அ. தி. மு. க. என்பன ஊழல் மலிந்த கட்சிகள் எனவும், எம். ஜி. ஆராலோ, ஜெயலலிதாவாலோ, ஊழலற்ற நேர்மையான ஆட்சியைத் தர முடியவில்லை எனக் கூறிவருகிறார்கள். இது காங்கிரஸ்காரர்களால் தான் முடியும் எனவும் கூறி வருகிறார்கள்.

மூப்பனார் இது மட்டுமன்றி இன்னும் எத்தனையோ விடயங்களைக் கூறிவருகின்றார், காங்கிரஸ்- அ. இ. அ. தி. மு. க. கூட்டணியை உடைக்கும் நோக்கத்தோடு, திராவிடக் கட்சிகளுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்வதே காங்கிரஸ்கட்சி சொந்தப் பலத்தில் வளர்வதற்குரிய க. விற்கு இலகுவாக வழி செய்துவிடும் என்பதே அவர்களின் எண்ணமாக இருக்கிறது. மூப்பனார் குழுவினர் அண்மையில் மேற்கொண்ட டில்லி விஜயத்தையடுத்து ஜெயலலிதா உசாரடைந்துள்ளார். ஆனால் மூப்பனார் குழுவினரின் டில்லி நடவடிக்கைகளை அவர் வெற்றி கொண்டு விட்டாரா? என்பதுதான் கேள்வி.

### சுவாமியின் தில்லுமுல்லுகள்

பல்வேறு கட்சிகளிலும் பிளவுகள் ஏற்படுவதற்கு அண்மைக் காலங்களில் காரணமாக இருந்த டாக்டர்சுப்பிரமணிய சுவாமி போன்றோரின் ஆதரவும், பின்பலம் மூப்பனார் குழுவின் நடவடிக்கைகளுக்கும் இருப்பதாகத் தெரிகிறது. வி. பி, சிங் பிரதமராக இருந்தபோது சந்திரசேகரை முன்னிலைக்குக் கொண்டு வந்ததன் மூலம் ஜனதாதளம் கட்சியை உடைத்தவர் அவர். கர்நாடக மாநிலத்தில் ராமகிருஷ்ண ஹெக்டேவுக்கு தலையிடியைத் தோற்றுவித்தவர் அவர்.

தற்போதும் ஜனதா தளம் கட்சியின் பன்னிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரித்தெடுத்ததன் மூலம் அக்கட்சியைப் பிளவுபட வைத்தவரும் அவரே தான். 1991-ம் ஆண்டில் கருணாநிதியின் தி. மு. க. ஆட்சி கவிழ்க்கப்படுவதற்குக் காரணமான டாக்டர் சுவாமி தமிழ்நாட்டில் தனக்கென ஒரு தளத்தை தேடி வருகின்றார்.

டாக்டர் சுவாமி தனது ஆலோசனைகளுக்கும், வழிகாட்டுதல்களுக்கும் ஜெயலலிதா செவிசாய்ப்பார் என்றே எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவரோ பதவிக்கு வந்தது முதல் டாக்டர் சுவாமியைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. டாக்டர் சுவாமி போன்ற இடைத்தரகர்களுக்கு ஊடாக அல்லாமல் பிரதமர் நரசிம்மராவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதிலேயே அவர் ஆர்வம் காட்டினார்.

இதனால் விரக்தியடைந்து போன சுவாமி ஜெயலலிதாவின் மதிப்புக் குறைவடையும் வகையில் எந்தச் செயலிலும் ஈடுபட சித்தமாயுள்ளார். ஜெயலலிதாவுக்கும் புலிகளுக்குமிடையில் தொடர்பிருப்பதாக காட்ட முயல்வதே அவ லலிதா அம்பலமாகி விடுவதோடு அவரது அரசியல் பலமும் குன்றிவிடும் என்று டாக்டர் சுவாமி அண்மைக்காலமாக கருதுகிறார்.

இது டாக்டர் சுவாமியின் புரளிக்கதை என்றே விஷயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன. ஆனால் ஜெயலலிதா இதை இலகுவாக எடுத்துக்கொள்ளவில்லைப் போலும். அவர் புதுடில்லிக்கு அவசர விஜயம் மேற்கொண்டதன் பின்னணியில் அதிகார பீடத்திலிருப்போருக்கு தமது நிலையை தெளிவுபடுத்துவதும், டாக்டர் சுவாமியின் சேறு பூசும் புரளிகள் பற்றி விளக்குவதும் ஒரு நோக்கமாக இருந்திருக்கலாம்.

ஆனால் ஜெயலலிதாவின் இலக்கு அவ்வளவு இலகுவானதல்ல இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருபவரும், பழுத்த அரசியல்வாதியுமான நரசிம்மராவுக்கு டாக்டர் சுவாமியின் தில்லுமுல்லுகள் புரியாமல் இருக்குமா என்றே அவதானிகள் கேட்கின்றனர்.

### நடராஜனால் நெருக்கடி

ஆனால் ஒரு காலத்தில் தமது நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்த எம். நடராஜனால் கட்சிக்குள் ஏற்பட்டு வரும் இனம் புரியாத பிளவைப் பற்றி ஜெயலலிதா மிகவும் கவலை கொண்டுள்ளார். முன்னாள் அரசாங்க அதிகாரியான எம். நடராஜனுக்கு நீண்டகால நோக்கில் அரசியல் அபிலாஷைகளும் உண்டு.

உயர்மட்ட சட்டசபை அங்கத்தவர்கள் முதல் தமிழக அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மட்டங்களில் நடராஜன் மிகுந்த ஆதரவைப் பெற்றுள்ளார். தஞ்சாவூர் மாவட்டத்தில் தேவர் ஜாதியைச் சேர்ந்த நடராஜன் அவரது இனத்தவரில் பலருக்கு நியமனம் பெற்றுக்கொடுத்துமுள்ளார்.

அ. இ. அ. தி. மு. க. வின் 147 சட்டசபை அங்கத்தவர்களில் 60 - 67 பேர் வரை நடராஜனினால் தேர்தல் டிக்கட் வழங்கப்பட்டவர் என்பதோடு முதலமைச்சரின் அலுவலகத்தில் இருக்கும் முக்கிய அதிகாரிகளும் நடராஜனுக்கு நெருக்கமானவர்களே.

ஜெயலலிதாவின் தோழி

ஆபத்தை உணர்ந்தவராக ஜெயலலிதா அவரை வெளியே தள்ளி வைக்க முயல்கிறார். அண்மையில் நடராஜன் தனது துருப்புச்சீட்டு ஒன்றையும் பாவித்து உள்ளார். ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் தமது மனைவியை ஜெயலலிதாவிடமிருந்து பிரித்து எடுக்கப் போவதாக அவர் கூறியிருந்தார். அவ்வாறு நிகழ்ந்தால் உலகில் உறவினர் என்று எவரும் இல்லாத ஜெயலலிதாவுடன் தங்கியிருக்க எவர் தான் முன் வருவார்? ஜெயலலிதாவின் பதிலடியாக பதவி துறக்கப் போவதாக நடித்துள்ளார் நுட்பமான இந்தப்பதிலடியின் மூலம் நடராஜன் வெலவெலத்துப் போனார். ஏனெனில் ஜெயலலிதாவைப் போன்ற ஒரு தலைவர் அவருக்குக் கிடைக்காது

ஆனால் அரசியல் அவதானிகள் இந்தச்சண்டை முற்றுப் பெற்று விட்டதாக நினைக்கவில்லை. ஏனெனில் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக் கொள்வதில் நடராஜன் இன்னமும் குறியாக இருக்கின்றார். அவர் அ.இ அ.தி மு க. விலும் அதற்கு வெளியிலும் இருக்கும் ஜெயலலிதா எதிர்ப்பாளர்களோடு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறார். ஜானகி அணியிலிருந்து வந்து இணைந்து கொண்ட பலரும் நடராஜனோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடும் என்று ஜெயலலிதா கருதுகின்றார்.

இந்தக் குழுவினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக நடராஜன் கட்சி நடவடிக்கைகளிலிருந்தும், அரசாங்க நடவடிக்கைகளிலிருந்தும் விலக்கி வைக்கப்படலாம் நடராஜனின் அனுசரணையோடு நியமனம் பெற்றவர்களை தூக்கி எறியும் அதிரடி நடத்தப்படலாம். இதில் சில பெருந்தலைகளும் உருளக்கூடும். அவரது வாழ்க்கையின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து விடுபட அவர், கடுமையாக நடந்து கொள்ளலாம்.

இந்த நடவடிக்கைகளில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவை நாடியே ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுடன் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக் கூடும் என்றே அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். எனவே மூப்பனாருக்கு

சட்டம் ஒழுங்கை மீறவில்லை, தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையைக் குழப்பியடிக்கவில்லை என்பதை நிருபிக்க பகீரத முயற்சி செய்தது. நடுநிலை பத்திரிகைகள் கூட இதனை ஏற்றுக் கொண்டன.

ஆனால் காங்கிரஸ் கட்சியும், பிரதானமாக வாழப்பாடி இராமமூர்த்தியும், தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தமது அரசியல் ஆதாயம் கருதி விடாப்பிடியாகவே நின்றார்கள். புலிகளால் தமிழ்நாடே அழிந்துபோய் விட்டது. சட்டம் ஒழுங்கு ஒழிந்தே விட்டது என்றும் கூக்குரல் இட்டனர். ஆட்சியிலிருந்ததிரு.மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசும் இதனை எதிர்த்துப் போர்க்கொடி தூக்காமல் மத்திய அரசிடம் மண்டியிட்டது. மிகக் குறைந்தளவு அங்கத்தவர்களைக் கொண்ட பொம்மை அரசாங்கமான சந்திரசேகர் அரசாங்கம் தம்மை ஆட்டுவித்த ராஜீவ் காந்தியின் விருப்பத்தின் பேரிலேயே நடந்து கொண்டது. பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி செய்த தி.மு.க. ஆட்சியைக் கலைத்தது.

ஆனால் இன்று அதே குற்றச்சாட்டு ஜெயலலிதா அரசிற்கு எதிராக வைக்கப்பட்டுள்ளது. அக்குற்றச்சாட்டை மறுப்பதற்கும், தனது ஆட்சியைக் காப்பதற்கும் ஜெயலலிதா தீவிரமான முயற்சியில் இறங்கியுள்ளார். இதன் பிரகாரம் விடுதலைப் புலிகளுக்கும், தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என அறிக்கை வெளியிட்டுள்ளார். தமிழகத்தைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றியதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை டில்லிக்குச் சென்று பிரதமர் நரசிம்மராவிடம் மண்டியிட்டார். அதாவது திரு. கருணாநிதி மேற்கொண்ட அதே வழிமுறையில் ஜெயலலிதா இறங்கியுள்ளார் என்றே தோன்றுகின்றது.

ஆனால் இந்தியாவில் நேரு குடும்ப ஆட்சியும், காங்கிரசிற்கு நேரு குடும்ப தலைமையும் இல்லாது போயுள்ளதே ஒழிய, காங்கிரஸ் பாரம்பரியமும், இந்திய ஜனநாயகத்தின் தன்மையும் மாறிவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. ராஜீவ் காந்தி போன்றோரை விட காங்கிரஸ் பாரம்பரியத்தில் திளைத்தவர் பிரதமர் நரசிம்மராவ். காங்கிரஸ் ஆட்சியின் பின்பே இந்தியாவின் நலனும், ஜனநாயக சித்தாந்தமும் என்பதே காங்கிரஸ் கட்சியின்கோட்பாடு. இதனை ஜெயலலிதா அன்றுபுரியாவிட்டாலும் இன்று புரிந்து கொள்வது நல்லது.

வருகின்றன. ஆகஸ்ட் 15ல் இந்திய சுதந்திர தினத்தின் போதும் புலிகளுக்குச் சார்பான சக்திகளால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ''ஆருடைய சுதந்திரத்தை நாம் கொண்டாடுகிறோம்?'' என்ற கேள்வி எழுப்பப்பட்ட சுவரொட்டிகள் சென்னை பஸ்களில் ஒட்டப்பட்டிருந்தன.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, ஜெயலலிதாவினாலும், அவரது கட்சியினராலும் மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதாக உணர்வதால் மத்தியில் ஆளும் கட்சியாக விளங்கும் தமக்கு உரிய அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றது.

நோக்கத்தோடு, திராவிடக் கட்சிகளுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்வதே காங்கிரஸ்கட்சி சொந்தப் பலத்தில் வளர்வதற்குரிய வழி என்பதே அவரது கருத்தாக இருந்து வருகிறது. ஆனால் காங்கிரஸ் கடசியிலும், அ. இ. அ. தி. மு. கவிலும் இருக்கும் மூப்பனாரின் ஆலோசகர்கள் இது தி. மு. க. வைக் கோட்டைக்கு அனுப்புவதற்கு வழிசெய்யும் எனக் கூறுகிறார்கள்.

மூப்பனார் கருணாநிதிக்குச் சார்பானவர் என்பதே வாழப்பாடி இராமமூர்த்தி போன்ற ஜெயலலிதாவுக்குச் சார்பானவர்களின் கருத்து. இந்தக் கூட்டணி முறிவடைந்து போனால் அது தி.மு.

ஈடுபட சித்தமாயுள்ளார். ஜெயலலிதாவுக்கும் புலிகளுக்குமிடையில் தொடர்பிருப்பதாக காட்ட முயல்வதே அவருடைய பிந்திய முயற்சியாகும், பயத்தின் காரணமாக ஜெயலலிதா அண்மையில் புலிகளோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக கூறியுள்ளார் தமிழ்ப் பத்திரிகையான தராசின் மூலமாக பெரும் தொகைப் பணம் கைமாறி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது உண்மையென்று நிருபிக்கப்படுமேயானால் விடுதலைப்புலிகளுக்குஎதிரானஜெயலலிதாவின் கடுமையானநிலைப்பாடு என்பது அர்த்தமற்றதாகிவிடும். இதனால் ஜெய

வலகத்தில் இருக்கும் முக்கிய அதிகாரிகளும் நடராஜனுக்கு நெருக்கமானவர்களே.

ஜெயலலிதாவின் தோழியான சசிகலா முதலமைச்சர் இல்லத்தில் வசிப்பதோடு முதலமைச்சருக்கு சேரவேண்டிய செய்திகளில் வடிகட்டுபவராகவும் இருக்கிறார். நடராஜனின் மனைவியான சசிகலாவின் சொற்களுக்கு முதலமைச்சரிடம் மிகுந்த மரியாதை உண்டு. இதனால் முதலமைச்சரின் ஆசியை நாடுபவர்கள் முதலில் சசிகலாவையே நாடி வருகின்றனர்.

நடராஜன் போன்ற ஒரு மனிதர் அருகில் இருப்பதன்

யில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக் கூடும் என்றே அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். எனவே மூப்பனாருக்கு கடிவாளம் போடும்படி பிரதமர் ராவிடம் ஜெயலலிதா கேட்டிருக்கக் கூடும். பிரதமருக்கு தேவையான நேரத்தில் ஆதரவளிப்பதாக ஜெயலலிதா வாக்குறுதி அளித்துள்ளார். இதுகாலவரையில் ஜெயலலிதா தனது வாக்குகளை காப்பாற்றி வந்துள்ளார் என்பதோடு அ. இ. அ. தி. மு க எம்பிக்கள் ஒவ்வொரு விடயத்திலும் எந்தவித முணுமுணுப்புமின்றி அரசை ஆதரித்து வந்துள்ளனர் என்பது தெரிந்ததே.

நன்றி: டெய்லி நியூஸ்

### தென் ஈராக்கில் பறக்கும் விமானங்கள்

# கூட்டு நாடுகளால் சுட்டுவீழ்த்தப்படும் ஈராக்கிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

தென் ஈராக்கில் பறக்கும் ஈராக்கின் இராணுவ ஜெட் விமானங்கள் ஹெலிகொப்டர்களை மேற்குக் கூட்டு நாடுகள் சுட்டு வீழ்த்தும் என்று அமெரிக்கா பாக்தாத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் ஷியா முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலேயே நேற்று முதல் பறக்க அனுமதிப்பதில்லை என புஷ்ஷின் நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அனுமதித்துள்ளன. இதேவேளை விமானங்கள் பறக்க விடப்படக்கூடாதென எச்சரிக்கை விடப்பட்ட போது ஜனாதிபதி சதாம் ஹுசைன் இந்த எச்சரிக்கையை மீறுவார் எனவும் குர்திஷ்கள் வாழும் வட ஈராக்கில் சதாம் மேற்கொண்ட நடவடிக்கைபோன்றுஇது இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கைத் துண்டாடுவதற்கு மேற்கத்தைய வல்லரசுகள் சதி செய்கிறது என ஈராக் குற்றம் சாட்டி உள்ளது. என்னதான் ஏற்பட்ட போதும் விமானங்கள் பறக்கக்கூடாதென்று மேற்கு நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஈராக் எதிர்த்தே தீரும் என்றும் பாக்தாத் தெரிவித்துள்ளது.

இவ்எச்சரிக்கைகள் தொடர்பாக ஈரான் அறிக்கையொன்றினை விடுத்துள்ளது. ஷியாக்கள் மீது பாக்தாத் எடுக்கும் நடவடிக்கைகளை ஈரான் எதிர்க்கும் அதே நேரத்தில் ஈராக்கின் பிராந்திய ஒருமைப்பாடு சுதந்திரம், எச்சந்தர்ப்பத்திலும் மீறப்படக்கூடாது என ஈரான் அறிவித்துள்ளது.

ஈராக்கிற்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஜெட் விமானங்களுக்கு உதவுவதற்காக மேலும் விமானங்கள் அனுப்பப்படும் என்று பென்டகன் அறிவித்துள்ளது.

இதே நேரம் இவ்வார நடுப்பகுதியில் ஆறு டொரண்டோ ஜெட் போர் விமானங்கள் ஈராக்கின் தென் பிராந்தியத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என லண்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணை ஆரம்பம்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரிக்கும் ஜெயின் ஆணைக்குழு அதன் விசாரணையை நாளை புதுடில்லியில்நடாத்தவுள்ளது.

இந்தவிசாரணையின் போது ஆணைக்குழுவின் அலுவல் வரம்பு பற்றிய வரன்முறைகள் பரிசீலிக்கப்படும்.

## சீனா - தென்கொரிய உறவுகள் சீரடைகின்றன

(சோல்)

சீனாவும் தென்கொரியாவும் 40 வருடங்களின் பின்னர் தமக்கிடையே ராஜீய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

இது குறித்த ஒப்பந்தமொன்றில் சீன வெளிநாட்டமைச்சரும் கையெழுத்திட்டுள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதி சீனாவிற்கு வெகு விரைவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருநாடுகளுக்கும் இடையே ராஜீய உறவுகள் ஏற்படுத்தப்படுவதால் ஆசியாவில் கெடுபிடிப்போரின் அந்திமகாலம் ஆரம்பமாகியுள்ளதாக தென் கொரிய ஜனாதிபதி தெரிவித்தார்.

## யுத்த நிறுத்தத்திற்கு ஆப்கான் குழுக்கள் தயார்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இவர்களின் குடும்பங்கள் நாட்டை விட்டு வெளியேறும் வகையில் அனைத்து முஜாகிதீன் குழுக்களும் ஓர் நாள் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள முன் வந்துள்ளன.

ஆனால், யுத்த நிறுத்தத்துக்கான நாள் இதுவரை முடிவு செய்யப்படவில்லை. ஐ நா. சபை கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து போராளிக் குழுக்கள் யுத்த நிறுத்தத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளன. மேலும், ஆப்கானில் மனித நேயப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஐ நா. குழு இந்தப் பணியைத் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகிறது

# ஈழநாதம்

## பெற்றுக் கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் பகல் 12.00 மணியளவில் பல்கலைக்கழக மாணவி ஒருவரால் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## மாவீரர் நினைவஞ்சலி

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் ஆகஸ்ட் மாதத்தில் வீரமரணமடைந்த பளை வட்டப் பகுதியைச் சேர்ந்த எட்டு மாவீரர்களின் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு முகமாலை பிரவீணா சனசமூக முன்றலில் நடைபெறும்.

பளை வட்டப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் இம்மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுவர். கூட்ட இறுதியில் 'காணி நிலம் வேண்டும்' நாடகம் இடம் பெறும்.

## கிழக்கில் கடலரிப்பை தடுக்கத் திட்டம்

கிழக்கு கடற்கரை ஓரமாக கடல் அரிப்பை தடுப்பதற்கான ஒரு பாரிய திட்டத்தை வெளிநாட்டு உதவிகளுடன் கடலோரப் பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் கிழக்குக் கரையோரம் பூராகவும் இது தொடர்பான பலவகையான ஆய்வுகளை மேற் கொண்டு வருகிறார்கள் என்றும்,

முதல் கட்டமாக கரையோரப் பிரதேசத்தில் சுண்ணாம்பு சூளைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் முருகைக்கற்கள் அகழ்வதை முற்றாகவே நிறுத்தும் வேலைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க நிறுவனத்திற்கு நிலம்;

## அரசாங்கம் வழங்குமானால் சாகும்வரை உண்ணா விரதம்

(மாத்தறை)

மொனறாகலை மாவட்டத்தில் அன்னாசிச் செய்கைக்கு அமெரிக்க நிறுவனமொன்றுக்கு பத்தாயிரம் ஏக்கர் காணியை வழங்கினால் அதனையெதிர்த்து மொனறாகலை அம்பாறைமாவட்ட விவசாயிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மொனறாகலை விவசாய அதிகாரிகள் முதலில் விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாச பண்டாவுக்கும், புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்னவுக்கும், மகஜரொன்றை அனுப்பி வைக்க வேண்டுமெனவும், அதற்கு தகுந்த பதில் கிடைக்காவிடின் சாகும் வரை உண்ணா விரதத்தை மேற்கொள்ள வேண்டும் என பல விவசாய அமைப்புக்கள்கலந்து கொண்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### புதிய நூல்

'சாத்தானின் வசனங்கள்' என்ற நூலை எழுதிய சால்மன் ருஸ்டி புதிய தொரு நூலை எழுதவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவரது 'சாத்தானின் வசனங்கள்' என்ற நூல் இஸ்லாமிய மதத்தை இழிவு செய்வதாய் குற்றஞ் சாட்டப்பட்டதும்; ஈரானினால் இவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளமையும் தெரிந்ததே.

கூட்டுப்படை குண்டுவெடிப்பு

## தடுத்துவைக்கப்பட்டோர் ஆட்கொணர்வு மனு தாக்கல்

கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி என்று கூறப்படும் வரதனுக்கு புகலிடம் அளித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் கீழ் கடந்த பதின்மூன்று மாதங்களாக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூவரின் விடுதலைக்குமாக ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொட்டகல பளிங்குத் தோட்டத்தைச் சேர்ந்த போல் ஜேக்கப் மேரியம்மா, பத்தனை தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ராமன் ராமகிருஷ்ணன், மலையக மக்கள் முன்னணியின் நோர்வூட்பகுதி அமைப்பாளர் ராமன் ராஜாராம் ஆகியோரே இம் மூவருமாவர்.

மேரியம்மாவின் கணவரும் ஏனைய இருவரினதும் தந்தையான ராமனுமே இவ் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்

சதி நாச வேலைகளை

## முன் கூட்டியே கண்டுபிடிக்க விசேட புலனாய்வு பிரிவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான நாசவேலை, சதிமுயற்சி, கிளர்ச்சி என்பவற்றை முன் கூட்டியே கண்டறியும்முகமாக விசேட புலனாய்வு பிரிவு ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக மிகவும் நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது

நம்பைகுளம், பூந்தோட்டம்

## கொள்ளை தொடர்பாக இரண்டு சிங்களவர் கைது

(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் நம்பைக்குளம் குடியிருப்பு பகுதிகளில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இரு சிங்களவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீடுடைப்பு, சைக்கிள் திருட்டு, பணம் சூறையாடல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் இவ் இருவரும் ஈடுபட்டுள்ளனர் என சந்தேகிக்கப்படுவதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. தேவசகாயம் காசோலையை தவறாகப் பயன்படுத்தி 35,000 ரூபாய் பண மோசடி செய்ததாக பொலிஸ் திணைக்களத்தில் கடமை புரியும் கே எம் ரத்னாயக்க என்ற இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை நிலைய

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

கிராமசேவகர் தெரிவுப் பரீட்சைக்கென பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் வட்டு - இந்துக் கல்லூரியிலும் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இ மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மானிப்பாயில் இயங்கும் தெல். அரசினர் ஆஸ்பத்திரி

(நமது நிருபர்)

கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டிருந்த தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மீண்டும் ... யான மக்கள் இடம்பெயர்ந்து மானிப்பாய்ப் பகுதியில் தங்கியுள்ளமையால் இவ் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மானிப்பாய் திருக்குடும்ப ...

## எங்கள் கிராம மர நிழலில் எதிரிகள் இளைப்பாற அனுமதியோம்

### -பைந்தமிழன்

சிங்களத்தின் கூலிகள் எங்களின் மண்ணிலே ஏறி நின்று எக்காளமிடுகின்றது. நாங்கள் ஓடி ஆடி விளையாடித் திரிந்த கிராமத்தின் மரநிழல்கள் அவனுக்கு இளைப்பாறும் இடமாகப் போக நாங்கள் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு கடந்த ஞாயிறு மாலை 3 மணிக்கு ஓராம் கட்டை மொடேன் கல்வி நிலையத்தில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாங்கள் நிமிர்ந்து நின்று மீன் பிடித்த கடலும், நிலத்திலே வேர்வை சொட்ட உழைத்த வயல்வெளிகளும் அவனுக்கு இரையாகப் போவதை நாங்கள் பார்த்திருக்க முடியாது.

எம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வருங்காலத் தூண்களை உருவாக்கித் தரும் பாடசாலைகள் எங்கனும் அவன் குடித்தாடுவதற்கு நாம் இடமளிக்க முடியாது.

இன்று பரீட்சை எடுக்க வேண்டிய மாணவ, மாணவிகளின் விழிகளிலிருந்து நீரருவி தான் பாய்ந்து கொண்டிருக்கிறது. 'அன்பார்ந்த மாணவர்களே' பாய்ந்து வரும் பகைவர் கூட்டத்தை அவர்களுடைய டாங்கிகளுக்கும் கவச வாகனங்களுக்கும் முன்னால் மனவுறுதியை மட்டுமே பலமாகக்கொண்டு எல்லையிலே நிற்கும் சகோதரர்களுக்குக் கை கொடுக்க வாரீர்.

காயப்பட்டு இரத்தத்தை இந்த மண்ணுக்குப் பாய்ச்சியவர்களுக்கு இரத்தம் கொடுக்க வாரீர். எதிரியை எதிர் நின்று தாக்குவதற்கு பதுங்கு குழி அமைக்க வாருங்கள். எங்கள் தாயகத்தை எதிரி முற்றுகையிட நாங்கள் அனுமதிக்க முடியாது நீங்கள் ஒவ்வொருவரும் மாணவ புலிகளாகத்திகழ்ந்தெழுந்து வாருங்கள் என்றார். [82]

## கருணாநிதியின் அறிவிப்பு வெறும் கண்துடைப்பு

### —வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு கருணாநிதி தமது கட்சிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று அறிவித்திருப்பது ஒரு கண்துடைப்பே என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் நேற்று செய்தியாளரிடம் பேசிய அவர், பத்மநாபா கொலையாளிகள் சம்பந்தமாக அப்போதைய தி மு. க. அரசு நடந்து கொண்ட விதத்தை தமிழ் மக்கள் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்றார். மக்களின் இந்த மனப்பான்மையை உணர்ந்து தான் அரசியல் கட்டாயங்களுக்காக் கருணாநிதி இப்படிக் கூறியிருக்கலாம் என்றார்.

மாநிலங்கள் அவையில் தி.மு.க. உறுப்பினர்களான முரசொலி மாறன், வை கோபாலசாமி ஆகியோரின் பேச்சுகள் புலிகளின் உறவை உறுதிப்படுத்துகின்றன என்றார்.

காங்கிரஸ் கட்சி இந்தக் கட்டத்தில் அ இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துள் உள்ள உறவை முறித்தால் திமுகவே மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடும் என்று வாழப்பாடி ராமமூர்த்தி குறிப்பிட்டார்.

### புலிகளின்

போதுஅவர்கள்வடக்கு, கிழக்கில் நினைத்ததை செய்ய அனுமதிக்கப்பட்டது.

புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. அரசாங்கம் வழங்கிய சீமெந்தைக் கொண்டே புலிகள் பங்கர்களை கட்டினார்கள் விளைவு என்ன?

புலிகளுக்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்கி விட்டது என இச் சபையிலிருந்து கொண்டு கத்தினால் மாத்திரம் புலிகள் தங்கள் ஆயுதங்களை கைவிட்டு விட்டு ஓடப் போவதில்லை புலிகளை தனிமைப்படுத்துவதற்கான ஜன...

## புலிகள் நடமாட்டம் தமிழகத்தில் இல்லை

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகரிக்க வில்லை என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்று கூறியுள்ளது.

சென்னையில் நேற்று முன் தினம் வெளியான இச்செய்திக் குறிப்பில் மேலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அநேகமாக அகற்றப்பட்டு விட்டன என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது

இதனிடையே தமிழகக்கரைகளுக்கு அப்பால் நடைபெறும் கடத்தல்களுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருப்பதாகவும், இதைத் தடுக்க மாநில அரசு எதுவும் செய்ய வில்லை என்றும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## காபூலில் கடும் சண்டை அரசவிமானங்கள் தாக்குதல்

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைச் சுற்றி அரசு ஆதரவு படைகளுக்கும் அரசுக்கு எதிரான படைகளுக்குமிடையில் பலத்த ஆயுதங்களுடன் கூடிய கடும் போர் நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடிப்படைவாதமுஜாகுதீன் போராளிக் குழுவினரின் புஸ்சாக் என்னும் இராணுவமுகாம் மீது அரசு தரப்புப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளன

காபூலை நோக்கியும் ஏறிகணைத் தாக்குதல் நடத்தப் பட்டது என பாகிஸ்தானில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தருணத்தில் முஜாகுதீன் தலைவர் ஹெக்மத்தியார்ஒற்றுமைக்காகப் போராடாமல் ...

ளப்பட்டு வருகிறது. என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தட கள பயிற்சி முகாம்

வடமராட்சி பிரிவுகளிலிருந்து மாவட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகளுக்கான தடகள பயிற்சிமுகாம் நாளை காலை 8-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர் தலைமையில் நடைபெறும் மேற்படி பயிற்சி முகாமில் செய்முறை அறிமுறை வகுப்புக்களை விளையாட்டதிகாரிகள் நடாத்துவார்கள்.

கரவெட்டி, பருத்தித்துறை மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து மாவட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகள் அனைவரும் பங்கு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

### மேலதிக

லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு உணவு, சுகாதாரம் மற்றும் இருப்பிட வசதிகளை வழங்க வேண்டிய நிலையில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. இதனால் மேலதிக உதவிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பு இணைய அலுவலகத்திற்குஅறிவித்திருகிறது

அதேவேளை இம் மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு மேற்படி விடயம் தொடர்பாக அவசர வானொலிச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளன (க)

குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. தேவசகாயப்பிள்ளை தெரிவித்தார்.

கைதான இருவரும் அட்டம்பகள் கடையைச் சேர்ந்த தசாநாயகா, பிரேமசிறி என்பவர்கள் என்றும் தெரிவித்தார்

இதே நேரம் வவுனியா இலங்கை வங்கிக் கிளையில்

மூடப்பட்டிருந்த தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மீண்டும் நேற்றுமுன்தினம் முதல்செயற்படத் தொடங்கியுள்ளது.

போதிய கட்டட வசதிகள் இன்மையால் கடந்த வருடம் ஆகஸ்ட் இறுதியில் மூடப்பட்டமை தெரிந்ததே.

தற்போது பெருந்தொகை யுள்ளமையால் இவ் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மானிப்பாய் திருக்குடும்பதியாக யோக இல்லத்தில் செயற்பட்டு வருகிறது.

இடம்பெயர்தோர், முகாம்களில் தங்கியுள்ளோர் உட்பட பெருந்தொகையான நோயாளர் கடந்த இரண்டு நாட்களில் அங்கு சிகிச்சை பெற்றதை அவதானிக்க முடிந்தது

# கோட்ட அலுவலகத்திற்கு அதிகாரங்களை வழங்குக

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் இலங்கையில் ஏனைய மாவட்டங்களிலுள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டது போல அதிகாரப்பரவலாக்கம் செய்து கல்வியில் யாழ் மாவட்டத்திலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சமவாய்ப்பு வழங்குக. செப்டெம்பர் மாத முடிவினுள் இது தொடர்பாக ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கவில்லையாயின் இவ்விடயத்தை மாகாண மத்திய அமைச்சர்களின் செயலாளர்களினதும் கல்வி அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை உருவாகும் என யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார், கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

போர்க் காலச் சூழலைக் காரணம் காட்டி அதிகாரப் பரவலாக்கத்தை அமுல் செய்வதை தட்டிக்கழிக்க வேண்டாம்.

தமிழருக்கு உரிமை வழங்க வேண்டுமென அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப்பரவலாக்கத்தைச் சிங்கள மக்களும் ஏனைய மாவட்டங்களும் அனுபவிக்கும் போது இதை நடைமுறைப்படுத்தும்படி பணிப்பாளருக்கு அரசு அதிகாரமளித்தும் பணிப்பாளர் நடைமுறைப்படுத்தாமல் இருப்பது வேதனை தருகின்றது

கல்வி அமைச்சு அதிகாரிகள் இதற்கான முழுப் பொறுப்பும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதாக எம்மிடம் தெரிவித்துள்ளமையினால் மேலும் தாமதமில்லாது அதிகாரப் பரவலாக்கம் செய்வதை நடைமுறைப் படுத்தி யாழ்ப்பாணக் கல்விச் சமூகமும் ஏனைய மாவட்டங்கள் போல கல்வியில் சமவாய்ப்புப்பெற ஆவன செய்யுங்கள் என வலியுறுத்தி இ.த.ஆ.ச பொதுச் செயலாளர் த.மகாசிவம் யாழ்.மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# இடம் பெயர்ந்த மக்களுக்கு சத்துணவுத் திட்டம்

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களிற்கு ''யுனிசெவ்'' நிறுவனம் சத்துணவுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளது.

இடம்பெயர்ந்திருக்கும் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், மற்றும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கே இத்திட்டம் முதற்கட்டமாக நடைமுறைப் படுத்தப்பட இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கு வசதியாக இடம் பெயர்ந்துள்ள மேற்படி தரப்பினர் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகிறது [க]

# குரக்கன் கொள்வனவு

உள்ளூர்உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக விவசாயிகளிடமிருந்து குரக்கன் கொள்வனவு செய்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன் வந்திருக்கிறது.

கொக்குவில், அளவெட்டி, பருத்தித்துறை,நாகர்கோயில், சாவகச்சேரி, பளை, கெற்பலி ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயங்களினூடாக ஒரு கிலோ 25 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

களை கைவிட்டு விட்டு ஓடப்போவதில்லை புலிகளை தனிமைப்படுத்துவதற்கான ஜனநாயக ரீதியான மாற்று வழியையும் அக்கறையுடன் பரிசீலிக்க வேண்டும். புலிகளின் அரசியல் பிரிவை உடனடியாக தடை செய்யவேண்டும் என்றும் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

### பிரச்சினையை

உண்மையில் இந்தொகுதியில் கடந்த 1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தொண்டமானிடம் மண்டியிட்டு காலைப்பிடித்து எம். பி. யானவர்கள் உண்டு ஆனால் நான் எவருக்கும் கை காட்டவும் இல்லை. மண்டியிடவும் இல்லை.

இந்தியப் படையை இங்கிருந்து இந்தியாவுக்கு இந்தியப் பிரதமரினதும் அங்குள்ள மக்களினதும் அனுமதியுடனும் தான் அனுப்பினேன். பலாத்காரமாக அனுப்பவில்லை என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

### ஜனாதிபதி

யதன் காரணங்களில் ஒன்றாக அண்மையில் கனத்தையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

### மாதகல்

இவ்வீடுகள் தகர்க்கப்பட்ட போது கரும்புகை எழுந்ததை அவதானிக்க முடிந்தது இதன் போது வெடித்த குண்டுகளின் ஒலி பலமைல் தூரங்களை அதிர வைத்தது. (ச)

### ஊழியர்

அங்கு அனுமதிக்காது திருக்கோணமலைக்கு அனுப்பிமா ஏற்றிவருவதற்கு அனுமதிகோரி யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வானொலிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளளர். (பா)

அடிப்படைவாதமுஜாகுதீன் போராளிக் குழுவினரின் புஸ்சாக் என்னும் இராணுவமுகாம்

### க. பொ. த.

பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் இரா, சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார் (ச,பா)

இத்தருணத்தில் முஜாகுதீன் தலைவர் ஹெக்மத்தியார்ஒற்றுமைக்காகப் போராடாமல் ஆப்கானிஸ்தானின் பெரிய இனமான தஸ்கி இனத்தின் தேசிய வாத ஆதரவைத் தேடுவதாகவும் பாகிஸ்தான் செய்திகள் கூறுகின்றன.


## நாடகம்

எதிர்வரும் தினங்களில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் திருக்கோணமலை மாவட்ட இடம் பெயர்ந்த கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியில்,

## "காணி நிலம் வேண்டும்"

[நாடகம்]

27-08-92 துன்னாலை [கரவெட்டி]

30 - 08 - 92 கொடிகாமம்
31 - 08 - 92 யாழ் புகையிரத நிலையம் அருகில்
05 - 09 - 92 பருத்தித்துறை (பஸ்நிலையம் அருகில்)
26 - 09 - 92 மூங்கிலாறு (முல்லைத் தீவு)

அன்பார்ந்த தமிழீழ மக்களே! இந் நாடகத்தில் வரும் பாத்திரங்கள், உரையாடல்கள் யாவும் குறியீடாகவே அமைந்துள்ளன எனவே உங்கள் சிந்தனைக்கு வேலைதரும் நாடகத்தைக்காண திரண்டு வாரீர்.

[சி / 4939]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 25-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5371

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

26-616, 27-2088, 41-2474, 24-5418, 41-2383, 41-9355, 27-5417, 28-2217, 41-7693, 27-5187, 22-4473, 24-6348, 24-4481

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

24-4560, 28-4441, 26-4450, 40-2249, 27-8515, 41-4129, 28-1857, 28-9259, 42-1019, 24-6439, 28-1311, 24-6639, 26-375, 28-6020, 27-297, 42-3329, 41-8617, 42-2364, 41-4418, 41 9663.